பக்கங்கள்: 8 Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 3 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 9 புதன்கிழமை (25-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily ஒளி 270

# வடக்குத் தளபதி, 15 அதிகாரிகள் இராணுவ நீதிமன்றத்தின் முன்!

## மண்கிண்டிமலை முகாமை கோட்டை விட்டதற்காக

கொழும்பு, ஆகஸ்ட் 25

மணலாறு மண்கிண்டிமலை (ஜனகபுர) முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது தொடர்பாக அச்சமயம் வடபகுதி இராணுவத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் ரோஹன் தலுவத்த, பிரிகேடியர் சிறில் எலிகே உட்பட 15 இராணுவ அதிகாரிகள் இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படவிருக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசாரணை மன்றம் தனது அறிக்கையை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினவிடம் கையளித்துள்ளது.

இராணுவத்தின் பிரதம நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா இந்த விசாரணை மன்றத்துக்கு தலைமை வகித்திருந்தார்.

இந்த மன்றத்தின் அறிக்கையின் படி —

வடக்கு தளபதி மேஜர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டிமலைக் காட்சி; நேற்று திறந்து வைப்பு

### பார்வையிட மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 25

கோம்பான்மணல் மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்கிண்டிமலை ராணுவ முகாமின் மாதிரி அமைப்பை விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி திரு. அன்பு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் திறந்து வைத்தார்.

மண்கிண்டிமலை ராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த 10 மாவீரர்களின் உருவப்படங்களுக்கும் திரு. அன்பு ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார்.

மாதிரி அமைப்புத் திறப்பு விழாவில் நிதர்சனம் நிறுவனத்தின் வெளியீடான ஜூலை மாத ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகையும் காண்பிக்கப்பட்டது.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு வெற்றி நாளை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் "இதய பூமி I இது ஒரு வரலாற்றுப் பதிவு" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை — மண்கிண்டிமலை இராணுவ முகாம் மாதிரி அமைப்பை ப்பார்வையிடுவதற்காக நேற்றுப் பெருந்திரளான மக்கள் அ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டி வீதிகளில் தலையில்லா முண்டங்கள்

### அடிக்கடி காணப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட முண்டங்கள் அடிக்கடி வீதிகளில் காணப்படுகின்றனவாம்.

விசேட படையினர் இக்கொலைகளைச் செய்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வீதி ரோந்துகளில் ஈடுபடும் படையினர் வீதிகளில் செல்லும் இளைஞர்களை தன்னிச்சையாக கைதுசெய்து கொண்டு செல்வதாகவும் —

இவ்வாறு அழைத்துச் செல்லப்படும் இளைஞர்களின் தலை துண்டிக்கப்பட்ட சடலங்கள் பின்னர் வீதிகளில் போடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

— இவ்வாறு கொடூரச் செயலில் ஈடுபடும் படையினரை இப்பகுதி மக்கள் "மோட்டார் சைக்கிள் பார்ட்டி" என அழைக்கின்றனர். (உ-த)

## இன்று முதல் தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 25

நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்தடைந்த "வாதுவ" கப்பலில் வந்து சேர்ந்த 211 தபால் பொதிகளும் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்திற்குஎடுத்து வரப்பட்டன. 81 வெளிநாட்டு தபால் பொதிகளும் இதில் அடங்கும்.

தபால்கள் இன்று புதன்கிழமை முதல் தரம் பிரிக்கப் பட்டுப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

இம் முறை வந்த தபால்கள் கிழித்து சேதமாக்கப்படவில்லை. இம் மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் சேர்க்கப்பட்ட கடிதங்களும் வந்து சேர்ந்துள்ளன. (த-162-17

### ராஜீவ் கொலைவழக்கு தீர்ப்பின் பின்

## பிரபாவை நாடு கடத்த இந்திய அரசு கோருமாம்

புதுடில்லி, ஆக. 25

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இலங்கையில் இருந்து நாடு கடத்தும்படி புதுடில்லி அரசு கோரும்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா ராஜ்ய சபையில் இத்தகவலை வெளியிட்டார்.

1992 ஆம் ஆண்டின் நாடு கடத்தல் சட்டத்தை மேலும் திருத்தங்களை சேர்த்து தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் நாடுகடத்தல் 1993 திருத்தச் சட்டத்தை ராஜ்ய சபை நேற்று நிறைவேற்றியது. அது தொடர்பாக இடம் பெற்ற விவாதத்துக்கு பதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைக் கடலில் மீனவர் படகுகள் மீது தாக்கு

பருத்தித்துறை முனை கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய அட்டகாசத்தினால் இரு மீன்பிடிப் படகுகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை சுமார் 7-30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

பிரஸ்தாப கடற்பகுதியில் இதேயிடத்தைச் சேர்ந்த ஸ்ரீ, சாந்தப்பு ஆகிய இருவருக்குச் சொந்தமான இரு படகுகளில் ஒவ்வொன்றிலும் மூன்று மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அதிவேக விசைப்படகு ஒன்றில் அங்கு வந்த கடற்படையினர் இரு படகுகளையும் நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்.

இப்படிச் சுட்டதில் சாந்தப்பு என்பவரின் படகின் எண்ணெய்த் தாங்கி மீது ஓட்டைகள் ஏற்பட்டுச் சேதமடைந்தது. ஸ்ரீ என்பவரின் படகு மீது கடற்படையினர் தமது விசைப்படகினால் மோதி சேதம் விளைவித்ததுடன் படகு மீது சரமாரியாகச் சுட்டதனால் அப்படகிலும் பத்துக்கு மேற்பட்ட துவாரங்கள் ஏற்பட்டுள்ளன.

படையினர் அங்கிருந்து சென்றதும் எண்ணெய்த்தாங்கி சேதமடைந்தபடகு மற்றைய படகினால் கரைக்கு இழுத்து வரப்பட்டது. (த-176)

## பேரினவாத நாசகாரத் திட்டம் "இதயபூமி-1" மூலம் தகர்ப்பு!

### வெற்றி விழாவில் கலந்து கொள்ள அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 25

மண்கிண்டிமலை முகாம் தாக்குதலின் மூலம் மணலாற்றைச் சிங்களவர் பூமியாக்கி, இராணுவ வேலி அமைத்து தமிழீழத்தை இரு கூறுகளாக பிரிக்கும் சிங்களப் பேரினவாதிகளின் நாசகாரத் திட்டத்திற்கு பலத்த அடி கொடுக்கப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை வெற்றியின் ஒருமாத பூர்த்தி நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இன்றைய இதயபூமி 1 வெற்றி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து, இந்த வெற்றிக்காக உயிர் நீத்த பத்துப் புலி வீரர்களுக்கும் வீர வணக்கம் செலுத்துமாறு அனைத்து மக்களையும் அன்போடு அழைக்கிறோம்.

இன்று நடைபெறும் இதயபூமி-1 வெற்றி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

சிங்களப் பேரினவாதத்திற்கு மரண அடியொன்று கொடுத்த மண்கிண்டி முகாம் தகர்ப்பின் ஒரு மாத நினைவு நாள் இன்றாகும். இந்த நினைவு நாள் ஒரு வெற்றி நாளாக தமிழீழம் எங்கும் இன்று கொண்டாடப்படுகின்றது.

தமிழீழத்தின் இதயப்பகுதியில் தமிழர் படையணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தென்னிலங்கையில் இருந்து

## குருமார் தூதுக்குழு அடுத்த மாதம் வரும்!

யாழ்ப்பாணம், ஆக. 25

தென் இலங்கையைச் சேர்ந்த மத குருமார்கள் தூதுக் குழு ஒன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களின் விஜயத்துக்கான பயண ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேற்கொண்டுள்ளது.

விமான மூலம் பலாலிவரும் இவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வரும் பணியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்றுள்ளது.

பௌத்த, கிறிஸ்தவ மத குருமார்கள் இத் தூதுக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளின் விடுதலை குறித்து விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் மோதல்

பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் ஒரு சிப்பாயும் ஓர் அதிகாரியும் அரச தரப்பில் காயமடைந்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

படையினரின் பதுங்கு குழிக்குள் புலிகள் புகமுயன்றபோது இந்த மோதல் இடம்பெற்றதாகத் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

## இன்றும் இளாலி படகுச் சேவை

இளாலி-பூநகரி படகுச்சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் ... அறிவித்துள்ளனர். (த)

## இடைக்கால நிர்வாகம் தீர்வு கிட்டும் வரை தேவை

### சபாநாயகர் சொல்கிறார்

கொழும்பு, ஆக 25

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை அங்கு சிவில் நிர்வாகத்தை நடத்தும் பொருட்டு இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது பொருத்தமானதே.

அதனாலேயே இந்த ஆலோசனையை நான் நாடாளுமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டிருந்தேன்.

நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச் முகம்மது நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைக்க அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு —

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பேராசிரியர் - உடலமைப்பியல்/நோயியல்/சட்ட மருத்துவம்/மனநோயியல்/மருந்தியல்/குழந்தை மருத்துவம்/அறுவை மருத்துவம்.
2. அறக்கொடைத்தலைசு-அங்கசு கோணல் அறுவை மருத்துவம் / சமூலையியல்.
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்-II/விரிவுரையாளர் - உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் /உயிரிரசாயனவியல் /உடலமைப்பியல்/நோயியல்/சட்ட மருத்துவம் / மருந்தியல் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்/நுண்ணியிரியல்/ஒட்டுண்ணியியல்.
4. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / உயிரிரசாயனவியல் / உடலமைப்பியல் /நோயியல்/சட்ட மருத்துவம் / மருந்தியல்/மகப்பேற்று மருத்துவமும், மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்/நுண்ணியிரியல்/ஒட்டுண்ணியியல்.
5. தற்காலிக செய்முறை காட்டுநர் - உயிரிரசாயனவியல் / நோயியல்.

சம்பள அளவுத் திட்டம்:

பேராசிரியர்:
ரூபா
15,860 - 6x390-18,200/-
(மாதமொன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா
10,400 - 5x325-12,035/-
(மாதமொன்றிற்கு)

விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா
5,850 - 10 x 260 -8,450/-
(மாதமொன்றிற்கு)
(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 5,850/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதாவது 6,370/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்).

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 6,370/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக செய்முறை காட்டுநர்:
ரூபா 4,225/- மாதமொன்றிற்கு (நிலையானது)

குறிப்பு:
1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசெம்பர் 28 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.
2. இத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதி வரை நிலுவையிலுள்ள வேளைகளை நிறைவேற்றும்படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993 - 11 - 12. இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993-09-24.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துக்கும் திரும்பக் கிடைக்காத 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால்மூலம்படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:
ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-08-19.

(சி-5829)

## ஆலயங்களில்

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஞான உகந்த விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று 24 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

தினமும் இரவு 6—7 மணி வரை சைவநெறித் தொண்டர் திரு. சத்தியமூர்த்தியின் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும். (ச)

o o o

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு கோயில் மடத்தில் கடந்த 22ஆம் திகதி தொடக்கம் 11 நாட்கள் அன்னதானம் நடைபெறுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

o o o

வண்ணை சிவன் கோயிலில் நாளை வியாழக்கிழமை காலை 7 மணி முதல் பிட்டுக்கு மண்சுமந்த உற்சவம் நடைபெறும் (ச)

o o o

சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் மஹோற்சவ கால நிகழ்ச்சிகளில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இசைமணி திரு. சி. துரைராசாவின் இன்னிசை விருந்து நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி வானம்பாடிகள் வில்லிசைக் குழுவினர் வழங்கும் வில்லிசை இடம்பெறும்.

o o o

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோயிலின் இரண்டு புதிய சித்திரத்தேர்களின் வெள்ளோட்ட விழா நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும்.

தேர்த் திருவிழா 30ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 31ஆம் திகதியும் இடம் பெறும். (ச)

o o o

அராலி தெற்கு வரைப்பிட்டி விநாயகர் ஆலய மணவாளக்கோல மகாசங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7மணி தொடக்கம் நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு விநாயகப்பெருமான் பூந்தண்டிகையில் வீதி உலா வரும் காட்சி இடம் பெறும் (த-12)

o o o

சுழிபுரம் மேற்கு ஸ்ரீஹரிஹரபுத்திரனார் ஐயனார் கோவில் வருடாந்த மணவாளக்கோல மகாசங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறும். நண்பகல் அன்னதானமும் பின்னர் சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (த-28)

o o o

நாட்டில் அமைதியும் சுபீட்சமும் வேண்டி மிருசுவில் கெற்பெலி பரமசிவன் ஆலயத்தில் இன்று புதன் காலை 6 மணி முதல் மகாசிவயாக விழா நடைபெறும். (த-117)

o o o

கொடிகாமம் மீசாலை வடக்கு இராமாவில் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

o o o

யாழ்ப்பாணம் உடுவில் கற்பொக்கணை அருள்மிகு ஸ்ரீ வீரசக்திப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் இன்று புதன் பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.


இரத்ததானம் உயிர் காக்கும்
உயிர் காக்க
சஞ்சீவி
18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.



## கீன் கல்வி நிலையம்
திருநெல்வேலி.
A/L 94

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

பொருளியல் II
(வரவு- செலவுத்திட்டம்)
ஆரம்பம் 28 — 08 — 1993
சனி 11 - 00 a m [சி/5827]


# அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்கல்

கீழே விவரிக்கப்பட்ட துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கேள்விப்பத்திரங்கள் என்னால் 10-09-93 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### துணிவகைகள்

1. கோடிட்ட துணி 45'' X 90'' — 450
2. ஏப்ரன் நீலம் — 25
3. தலையணை (பஞ்சு) — 125
4. தலையணை உறை 29" X 19'' (வெள்ளை) — 125
5. முகத்துவாய் (வெள்ளை) 45'' X 22'' — 150
6. கைத்துவாய் (வெள்ளை) 26½'' X 52'' — 150
7. டவல் (கோடிட்டது) 27'' X 27'' — 100
8. திரைச்சீலை (கேஸ்மென்ற்) — 325 மீற்றர்

### மரத்தளபாடங்கள்

1. பெடஸ்ரல் மேசை 4½' X 2½' X 2½' (இரண்டு லாச்சி, முதிரை) 15
2. மேசை சாதாரணம் 4½' X 2½' X 2½' (இரண்டு லாச்சி, முதிரை 20
3. கதிரை கைபிடியுடன் (பொதுத்தரம், முதிரை) 40
4. கதிரை சாதாரணம் (பொதுத்தரம், முதிரை) 50
5. சார்மனை வாங்கு 6' X 18'' X 2' 10'' (முதிரை) 48
6. தட்டெழுத்தாளர் மேசை 4' X 2' X 2½' (முதிரை) 02
7. தட்டெழுத்தாளர் கதிரை (முதிரை) 02

மேற்படி கேள்விப் பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும். அத்துடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்கு துணிவகைகள், மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' என்று குறிப்பிடல் வேண்டும். இப்பத்திரங்கள் என்னால் 10 - 09 - 1993 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது சமுகமளிக்கலாம் அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரைச் சமுகமளிக்க ஒழுங்கு செய்யலாம். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் 07 - 10 - 93 திற்கு முன் பொருள்களை வழங்க வேண்டும். இப் பொருள்களின் மாதிரிகளைப் பார்வையிட விரும்புவோர் 02 - 09 - 93 ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்குரியவர் வழங்கும் பொருளின் மாதிரிகளை முதலில் காண்பித்து அனுமதி பெற வேண்டும்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்.

சு. சே. பி. ப பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
23 - 08 - 1993

(சி-5689)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 07 | 29 |
| — | — |
| 02 | 08 |
| — | — |
| 1947 | 1990 |

திருமதி
## இராஜேஸ்வரி கதிரவேலு

திதி: 25 - 08 - 1993

''வாழ வேண்டிய வயதில் வையகத்தை விட்டு மறைந்து, கட்டிய கணவன் கதிகலங்கவும், பெற்ற பிள்ளைகள் துயருறவும் விடுத்து விதிவசமாய் சென்ற எம் குடும்பத் தலைவியை மூன்றாண்டல்ல, பல ஆண்டுகள் சென்றாலும், மறவோம் யாம்''

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.

29/89), காரைக்காட்டு லேன்,
வண்-வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

(27048)

# கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A.
யாழ்ப்பாணம்.

## A/L 1994 பகல் நேர வகுப்புகள்

| பாடங்கள் | கிழமை | பிரிவு I பாடத்திட்டம் | பிரிவு II மீட்டல் வினா - விடை | ஆசிரியர் குழு |
|---|---|---|---|---|
| பொருளியல் | செவ் / வியா | 8 — 10 | 10 — 12 | திரு. உதயன் |
| கணக்கியல் | செவ் / வியா | 10 — 12 | 8 — 10 | திரு ஸ்ரீ |
| அளவையியல் | செவ் / வியா | 12 — 2 | 12 — 2 | திரு. சயந்தன் |
| வர்த்தகம் | சனி / ஞாயிறு | 7 — 8 | 8 — 9 | திரு- இரட்ணம் |
| இந்து நாகரிகம் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | சனி / ஞாயிறு | 12 — 1 | 12 — 1 | திரு தங்கராசா |
| புவியியல் | சனி / ஞாயிறு | 1 — 2 | 1 — 2 | திரு. வேலா |
| கிறிஸ். நாகரிகம் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. நோபேட் |
| அரசியல் | சனி / ஞாயிறு | 11 — 12 | 11 — 12 | திரு. பஞ்சு |

ஆரம்பம்: 02 - 09 - 93 [காலை 8 மணி]

குறிப்பு:
1. அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
2. A/L 1993 ஆகஸ்டில் பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டும் இப்பிரிவுகளில் அனுமதிக்கப்படுவர்.

— நிர்வாகம்

(சி-5698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY.

**G.C.E. A/L 94 95 English Literature**

New Batch begins on 27th Aug. at 3·30 p.m.
Teacher: S. THEIVATHAVAPALAN
Dip. in Eng. (Singapore)
Notes, Tutorials etc. will be Supplied.
- DIRECTOR.

(6443)



## பதவி வெற்றிடம்
### [உடனடி வேலைவாய்ப்புக்கள்]

தென்மராட்சி எல்லைக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத் திட்டங்களுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியான அபேட்சகரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்காளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
2. உள்ளக கணக்காய்வாளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
3. கணக்கு பதிவாளர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
4. காசாளர் (வயது எல்லை 25 — 45 வரை)
5. எழுது வினைஞர்கள் (வயதுக் கட்டுப்பாடு இல்லை)
6. வேலைத் திட்ட முகாமையாளர் (பல்துறைகளிலும் முகாமையாளர் தேவை)
7. பொறி முறை பொருத்துநர் (Mech - Fitter)
8. பணியாளர்கள் (வயது எல்லை 50 மேற்படலாகாது)
9. சமையல்காரர் (ஆண்கள் மட்டும்)
10. உணவு பரிசாரகர் (வயது எல்லை இல்லை)
11. காவலாளிகள்

★ வெற்றிடம் 1 தொடக்கம் 7 வரை விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் தங்கள் கல்வித் தகைமைகள், தொழில் அனுபவங்கள், விசேட தகைமைகள் ஆகிய விவரங்களுடன் தமது சொந்த கையெழுத்தில் விண்ணப்பங்களை தயார் செய்தல் வேண்டும்.

**சம்பளம்:**

கல்வித் தகைமை, முன் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தபால் மூலமோ அல்லது நேரிலோ கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 05-09-1993 நண்பகல் 12 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பொறுப்பாளர்,
**கேடில்ஸ் தும்புக் கைத்தொழில்-நிறுவனம்,**
தலைமை அலுவலகம்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(27012)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24 – 11 – 1945

மறைவு: 05 – 09 – 1992

**அமரர் காசிப்பிள்ளை கந்தசாமி**
(அரச நில அளவையாளர்- யாழ்ப்பாணம்)
திதி: 25 — 08 — 1993

ஆண்டொன்று சென்றாலும்
ஆறுமோ எம் கவலை
பாடுபட்டு உழைத்தீர்!
பாரினிலே மேன்மையுற
பயன் எதையும் பாராது
பரமன் தாழ் சென்றீரோ!
பரிதவித்து நாம் இங்கு
பாரின் மிசை வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

"சோபனா",
செட்டிச்சோலை,
அளவெட்டி.

(6422)

தீவிரவாதிகள் ஊடுருவுவதற்கு முயற்சியாம்

# கொழும்பில் பஸ் பயணிகள் படையினரால் தீவிர சோதனை

கொழும்பு, ஆக. 24

கொழும்பு மாநகரில் அமைக்கப்பட்டு உள்ள சோதனைச் சாவடிகளில் படையினரும் பொலிஸாரும் ஒவ்வொரு பஸ்ஸையும் மறித்து பயணிகளைச் சோதனையிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரின் உள்ளே செல்வதற்கு தீவிரவாதிகள் அரச பஸ்களைப் பயன்படுத்துவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பஸ் பயணிகளைச் சோதனையிடுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் போக்குவரத்துத் தாமதத்தைக் குறைக்க மாநகரில் குறைந்த தூரத்துக்குச் செல்லும் பஸ் பயணிகள் கூட தம்முடன் தேசிய அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லுமாறு பாதுகாப்புப் படையினர் கோரியுள்ளனர்.

முன்னர் சோதனைச் சாவடிகளில் மோட்டார் சைக்கிள்கள், வான்கள் ஆகியன மறிக்கப்பட்டு படையினரால் சோதனையிடப்பட்டு வந்தன. கார்களும், லொறிகளும் சில சமயங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

கைது செய்யப்பட்ட சில தீவிரவாதிகள் விசாரணையின்போது கொடுத்த தகவல்களைத் தொடர்ந்து பஸ்கள் அனைத்தையும் சோதனைத் தடை முகாம்களில் மறித்து அவற்றில் உள்ள பயணிகளைச் சோதனையிடுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாதாந்த உதவிப் பணம்

புங்குடுதீவு, வேலணைப் பகுதிகளைச் சேர்ந்தோருக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம்— ஏழு மாதங்களுக்கான கொடுப்பனவு— ஒரே தடவையாக வழங்கப்படுகிறது.

யாழ். மத்திய தபாலகத்தில் கொடுப்பனவு வழங்கும் வேலை நடைபெற்று வருகிறது.

இதே வேளை, செற்பலி அகதி முகாமில் வசிக்கும் மக்களுக்கான 7மாத கொடுப்பனவு விடத்தல் பளை உப தபாலகம் ஊடாக வழங்கப்படுகின்றது என்று வேலணை உ. அ. அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## சந்தைகள் புனரமைப்பு

யாழ். மாநகரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்வியங்காடு, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலை சந்தைகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு வர்ண பூச்சுக்கள் அடிக்கப்பட்டுள்ளதுடன் கல்வியங்காட்டு சந்தையில் மேலதிக கொட்டகைகளும் அமைக்கப்பட்டு இறைச்சி கோழிகளின் விற்பனைக்காக அவை ஒதுக்கப்பட்டுள்ளன.

## மென்பான பாவனை குறித்து மக்களுக்கு அறிவுறுத்து

மென்பானம், பழரசம் தயாரிப்பின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி தொழில் துறை மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிவுறுத்தல்களை சில உற்பத்தியாளர்கள் முழுமையாகக் கைக்கொள்ளாமல் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக தொழில் துறை மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போத்தல்களிலே ஒட்டப்பட்டிருக்கும் லேபல்களில் தயாரிக்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும் குறிப்பிடப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தலை சில உற்பத்தியாளர்கள் பின்பற்றவில்லை. திகதிகள், தெளிவாகக் குறிப்பிடப்படாதிருக்கும் மென்பானம், பழரசம் போன்றவை மக்களுக்கு தீங்கினை விளைவிக்கக் கூடியதாக இருக்கலாம் என்பதால் இவற்றினை பாவிப்பது தொடர்பான விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


**SPECIAL ENGLISH**
விசேட ஆங்கிலம்

★ மொழித்திறன்கள் ஒருங்கிணைந்த கற்கை நெறி.
★ இலக்கண, இலக்கிய மயமானது.
★ உயர் கல்வி மாணவர்க்குரியது
★ NCE, TOEFL, ENGLISH TEACHERS பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்திற்கமைவானது.

ஆசிரியர்:- த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 30 - 08 - 1993
மு. ப. 9 - 30 மணி

விவரங்களுக்கு:-
நிர்வாகி,
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

(இ-5824)



**தரமான இறைச்சி கிடைக்கவில்லை என்று கவலையா??**

★ **கவலையை விடுங்கள்**

இறைச்சிக்கான ஆடு, மாடு, கோழி என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1. த. பொ.மே. நிறுவனத்தின் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் கோட்ட செயலகங்கள்.
2. உதயம் பல்பொருள் அங்காடி
   ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
3. தாயகம் விற்பனை நிலையம்
4. மொத்த விற்பனை நிலையம்
   ஆடியபாதம் வீதி (பொற்பதி வீதிச் சந்தி)

தரமான மாட்டிறைச்சி வற்றலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தரமான மாட்டிறைச்சி வற்றல் கிலோ 160/-மட்டுமே**

நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம்:
**உதயம் பல்பொருள் அங்காடி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-5831)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அச்சகப் பாவிப்பிற்குரிய இங்கிலாந்து தயாரிப்பான இன்கின் டெமி சிலிண்டர் மெஷின் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு இல. 553, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5818)

Prima சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27085)

## மில்க்வைற் சலவைத்தூள்

காலம் பெறுமதியானது: துரித சலவைக்கும், தூய வெண்மைக்கும், துணியின் பிரகாசத்திற்கும் மில்க்வைற் சலவைத்தூள். 50 கிறாம் பக்கற் ருபா 6/-, 450 கிறாம் பக்கற் ருபா 45/-, 450 கிறாம் பக்கற்கொண்ட பெட்டி (2 டசின்) ருபா 1000/-. சலவைத்தூள் வெற்றுப்பக்கற்றுகளுக்கு பரிசுகள் உண்டு. 'மில்க்வைற்' (சி-5816)

## ENGLISH

G. A. Q. G. C. E. (O/L), Spoken English புதிய பிரிவுகள் 26-8-93 வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. தொடர்பு R. சிவலிங்கம் Dip-in, Eng) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறைவீதி. ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

[5686]

## மணமகன் தேவை

இந்து, வயது 36, மகம் 2ஆம் பாதம், செவ்வாய் 2 குடும்பநல உத்தியோகத்தர் (P. H. M.) பெண்ணுக்கு அரச, கூட்டுத்தாபன, வியாபார முகவர் மணமகன் தேவை. வீட்டுடன் சீதனம். தொடர்பு; குமாரசாமி, டச்சு வீதி, காளி கோயிலடி, சாவகச்சேரி வடக்கு. 27049)

## CAKE ICING CLASS

Cookery, Cake Icing & Sugar Craft புதியவகுப்புகள் 28-8-93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Yogi Home science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (27057)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். ந. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (27008)

## போட்டோ பிரதிகள்

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள் இப்போது எங்களால் செய்து கொடுக்கப்படுகின்றன. சித்திரலயா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5669)

## சீயாக்காய்ப்பவுடர்

காலேவி சீயாக்காய்ப்பவுடர். யாழ்ப்பாணத்தில் விநாயகர் களஞ்சியத்தில் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (26779)

## ஆண்டு 5 அனுமதிப்பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை ஆண்டு 5 மாணவருக்கு 29-08-93 ஞாயிறு முற்பகல் 8-00, 11-00 நேரங்களில் நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. இணைய விரும்புவோர் தொடர்பு கொள்க: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27045)

## ஆனந்தம்

சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர் பேன், பொடுகு, அழுக்கு அகற்றி, குளிர்ச்சியானது. சுகாதாரத்திற்கு சிறந்தது. ஐந்து நிமிடம் வெந்நீரில் ஊறவிட்டு பாவிக்கவும். கிடைக்குமிடம்: ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்-சாவகச்சேரி, திருவருள் களஞ்சியம்- கொடிகாமம், திரு. மு. சச்சிதானந்தம் வியாபாரிமூலை, பருத்தித்துறை ஸ்ரீகணேஸ் ஸ்ரோர்ஸ், விக்கம் ஸ்டோர்ஸ், நாவற்குழி. (சி-5673)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி!



மலர்வு: 03 — 02 — 1956

உதிர்வு: 25 — 08 — 1986

செல்வி

## விஸ்வலிங்கம் சத்தியபாமா

(முன்னை நாள் ஹற்றன் நாஷனல் வங்கி உத்தியோகத்தர்)

இலட்சிய நெறியில் நின்றே இலக்கியமான சத்யா!
பளர் புகழ் பகலவன் பாகமே துணையாய்க் –
கொண்டாய்!
மலர்முகம் மறக்கவாற்றா மறுகிடும் சுற்றம் நீத்தே
இறையடி இருவிரும் இன்புற்று வாழ்வீர் பாமா!

நித்தமும் நினைந்து நையும்;
பெற்றோர், அத்தை, அத்தான்மார்,
சகோதர, சகோதரர்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

''யமுனா'',
ஆனைக்கோட்டை. (27046)

மீண்டும் அஸ்ரனில

# வெளிவாரி பட்டப்படிப்புகள்

✶ B. A. பரீட்சைக்கான (பேராதனை)

3 மாத **துரித மீட்டல் வகுப்புகள்**

★ யாழ். பல்கலைக்கழக
(வெளிவாரி 1ஆம் 2ஆம் வருட)

பரீட்சைகளுக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்: 04 - 09 - 1993**
மு. ப. 9 மணி

| | |
|---|---|
| பொருளியல்/ மெய்யியல்: | திரு. மன்மதராசன் |
| அரசியல்: | திரு. கேதீஸ்வரன் |
| தமிழ்: | திரு. நாகேஸ்வரன் |
| இந்துநாகரிகம்: | திரு. M. J. சர்மா |
| கணக்கியல்/ வர்த்தகம்: | பிரபல ஆசிரியர்கள் |

விபரங்களுக்கு:

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

(சி-5682)

# 3ஆம் வருட நினைவலைகள்



அன்னை மடியில்: 10 — 08 — 1950

ஆண்டவன் அழைப்பில்: 25 — 08 — 1990

## பறுநாந்து யேசுநாயகம்

(அன்ரன்)

ஆண்டு மூன்றே அகன்றாலும்
அன்பை மறக்க முடியாமல்
ஈண்டும் நினைவுகள் மாறாமல்
இன்றும் நாங்கள் தவிக்கின்றோம்
நன்றே இறைவன் விண்ணரசில்
நலமாய் நீங்கள் வாழுவதை
என்றும் நாங்கள் நம்புகின்றோம்
எனினும் தொடர்ந்து வேண்டுகிறோம்!

பாசமுடன் நினைத்திருக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. [27059]

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 23 — 11 — 1943

அசுரர்கள் அழிப்பு: 25 — 08 — 1990

அமரர்

## வல்லிபுரநாதன் சண்முகநாதன்

25 - 08 - 1990இல் ஸ்ரீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையான சிரேஷ்ட புதல்வன் தாகத்தைத் தீர்த்த தர்மன் கயப்படைக் குண்டால் வீழ்ந்து மாகதிதையடைந்து மூன்று ஆண்டுகள் கழிந்தும், துன்ப வேகத்தால் ஓங்கி வேறு துணையின்றி வாடி நின்றோம். பாகனசர் பாதம் வைத்து சாந்தி நீ பெறுக மாதோ.

தகப்பனார்: ஏ. அ. வல்லிபுரநாதன்
(மரண விசாரணை அதிகாரி-அல்லைப்பிட்டி,
சமாதான நீதிபதி - யாழ். மாவட்டம்),
தாயார், சகோதரர்கள்.

43, குமாரசாமி வீதி,
சந்தர்மடம். (6444)

# வெலிங்டன் சந்தியில்!




# UNIKCO COMPUTER CENTRE

COMPUTER பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- ✶ BASIC Language (Including Graphics, Sound & Files)
- ✶ PASCAL Language (பல்கலைக்கழகம் செல்லவிருப்பவர்களுக்கு மட்டும்)
- ✶ dBASE III Plus and MS DOS
- ✶ LOTUS 1 2 3 and MS DOS
- ✶ WORD PROCESSING (Word star Rel 5 5 and MS DOS)

✶✶ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்: 29 — 08 — 1993
✶✶ வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 30 — 08 — 1993
✶✶ Equipment Used: ACER, ARE Computers (IBM Compatibles)

மேலதிக விவரங்களுக்கு:

37, Clock Tower Road Jaffna.

(சி-5688)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மற்றும் ஒரு பேரிடி

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவதற்கு புதிதாகப் படை அணிகளைத் திரட்டும் முயற்சி, இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களுக்கு போதுமான ஆட்கள் செல்லாததால் அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்துக்கு பத்தாயிரம் பேரைத் திரட்டும் திட்டத்தின் கீழ் தென்பகுதியில் 21 ஆட்சேர்ப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு நேற்று முன்தினம் நேர்முகப் பரீட்சைகளும் ஆரம்பமாகி இருந்தன.

ஆனால் அரசுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் நேர்முகப் பரீட்சையின் முதல் நாளே ஆட்சேர்ப்பு நிலையங்களுக்கு மிகவும் சொற்ப எண்ணிக்கையினரே சென்றிருந்தனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இத்தகைய நிலையில் அரசாங்கம் ஆயிரம் பேரையாவது திரட்டக்கூடியதாக இருக்குமா? என்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தி முகவர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

இம்முறை இப்படியான ஒரு நிலைமை ஏற்படலாம் என்று அரசு முன்கூட்டியே ஊகித்துக் கொண்டது போலும்.

அதனால் தான் இயலுமான அளவு படையினரையாவது திரட்டும் உள்நோக்கத்துடன் இராணுவத்தில் சேருவதற்கான தகைமைகளை அரசு குறைத்திருந்தது.

இராணுவத்துறைக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் இராணுவத்தில் சேருவதற்கான கல்வித் தகைமை 8ஆம் வகுப்பில் இருந்து 5ஆம் வகுப்பாக குறைக்கப்பட்டது. அத்துடன் இராணுவத்தில் சேருவோருக்கான வயது மற்றும் உயரம் ஆகியவற்றில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. இவற்றுக்கு மேலாக இராணுவத்தினருக்கு கவர்ச்சியான சம்பளம், வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

இத்தனைக்கும் பின்னரும் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு இம்முறையும் பின்வாங்கி விட்டார்கள்!

இராணுவத்தில் சேர்ந்தால் தம்மை வடக்கு-கிழக்கு போர் முனைக்கு அனுப்பிவிடுவார்கள், தாம் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டு விடலாம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

போர்முனையில் கொல்லப்படும் சிப்பாய்களின் சிதைந்த உடலங்கள் பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு சிங்களக் கிராமங்களுக்கு அனுப்பப்படுவது தற்போது வழக்கமான நிகழ்ச்சியாக மாறிவருவதும் ஒரு காரணம்.

வடக்கு - கிழக்குப் போரை நடத்தும் அரசியல்வாதிகளும், இராணுவ உயர்பீடமும் சுகபோகம் அனுபவிக்க, யுத்த களத்தில் தமது மதிப்பிடற்கரிய உயிரைப்பலி கொடுப்பது கிராமப் புறத்து ஏழைச் சிங்கள இளைஞர்களே என்பதைத் தென்னிலங்கை மக்கள் ஓரளவேனும் உணரத் தலைப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

இராணுவத்துக்கு புதிதாக சிங்கள இளைஞர்கள் சேருவதற்குத் தயங்குவதுடன் ஏற்கனவே இராணுவத்தில் உள்ளவர்களும் சொல்லிக்கொள்ளாமல் விலகிச் செல்கின்றனர்.

இப்படி விலகிச் சென்றவர்கள், கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனோர் மட்டும் 17 ஆயிரம் என்று மதிப்பிடப்படுகிறது.

அரசியல் தீர்வுக்கான கதவுகளையும் அரசு மூடிவிட்டது. அதே சமயம் போருக்குத் தேவையான ஆட்களைத் திரட்ட முடியாத நிலையும் அதற்கு ஏற்பட்டிருக்கிறது.

யதார்த்த நிலையை இனியாவது உணர்ந்து அரசும் தென்னிலங்கைக் கட்சிகளும் இராணுவத் தீர்வைக் கைவிட்டு உகந்த அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு திறந்த மனதுடன் முன்வர வேண்டும்.

மணிகிண்டிமலை முகாம் தாக்குதலுக்குப் பின்னர், விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்க் கோஷம் எழுப்பும் தென்னிலங்கைப் பேரினவாதச் சக்திகளுக்கு, இராணுவத்தில் சேர சிங்கள இளைஞர்கள் பின்னடிப்பது மற்றொரு பேரிடி ஆகும்.

## தபால்களை சேர்க்கலாம்

யாழ்ப்பாணம், ஆக. 25

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்படவுள்ள குமணக் கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

இதற்கு ஏதுவாக நாளை காலை 8 30 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் வெளி இடங்களுக்கான தபால்களைச்சேர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-168)

## மிதிவெடியில் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், ஆக. 25

யாழ். கோட்டைப் பகுதியில் மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர், முழங்காலுக்குக் கீழ் வலது கால் சிதறுண்டு காயமடைந்தார்,

இருபாலையைச் சேர்ந்த வேலாயுதம் ஸ்ரீகாந்தா (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (த-15)

# நெசவு உற்பத்தியாளருக்கு உதவி வழங்க நடவடிக்கை

தற்போதைய போர்க் காலச் சூழ்நிலையில் நூல் கிடைக்காமையால் உற்பத்திகளை மேற்கொள்ள முடியாது இன்னல்களை அனுபவிக்கும் நெசவு உற்பத்தியாளர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு —

இந்நிலையைப் போக்கும் நோக்குடன் உற்பத்திகளை மேற்கொள்ளத் தேவையான நூல்களையும் ஏனைய உபகரணங்களையும் பெற்றுத்தரும் நடவடிக்கைகளை தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி உதவிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் நெசவு உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஏ)

# யாழ்., கிளிநொச்சியில் வீதித் திருத்த வேலைகள்

யாழ்ப்பாணம், ஆக. 25

தேசிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதம பொறியியலாளர் பிரிவிற்கு வீதித்திருத்த வேலைகளுக்கு கிடைக்கப் பெற்ற 15 லட்சம் ரூபாவைக் கொண்டு இதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சில வீதிகள் திருத்த வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

யாழ் மாவட்டத்திற்கென இதற்காக கிடைக்கப் பெற்ற 275 தார் பரல்களைக் கொண்டு முதற்கட்டமாக யாழ் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு வரையும், பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து 1மைல் வரைக்கும், யாழ்-கண்டிவீதியில் சாவகச்சேரி வரையும், யாழ்-மானிப்பாய்-காரைநகர் வீதியில் சங்கானை வரையும் சிறு திருத்த வேலைகள் முடிவுற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கென கிடைக்கப்பெற்ற 120 தார் பரல்களைக் கொண்டு முதற் கட்டமாக கிளிநொச்சி கண்டி வீதியில் முறிகண்டி வரையும் சிறு திருத்த வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. (ஓ-162)

### பருத்தித்துறை காணிப் பதிவகத்தில்

# அத்தியாவசிய தேவைக்கே பிறப்பு அத்தாட்சி பத்திரம்

வடமராட்சி, ஆக. 25

பருத்தித்துறை பெரும்பாக காணிப்பதிவகத்தில் 1954ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மிக அத்தியாவசிய தேவைகளுக்கே வழங்கப்பட்டு வருகின்றன.

பிறப்பு அத்தாட்சி சம்பந்தமான விவரங்கள் எழுதும் புத்தகங்கள் இல்லாததால் இதுவரை காலமும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

தற்போது சொற்ப பிறப்பு அத்தாட்சிப் பத்திர புத்தகங்களே வந்து சேர்ந்ததை அடுத்து, மிகவும் அவசர தேவைக்கு மட்டும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுவதாக பருத்தித்துறை மாவட்ட மேலதிக காணிப்பதிவாளர் திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (த-173)

## நாளை

பெரோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு நாளை வியாழக்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும். (ஏ)

° ° °

யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய சகலருக்குமான கூட்டம் ஒன்று நாளை வியாழன் காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டுக் கழகங்களினதும் உதைபந்தாட்டச் சங்கங்கள், கரப்பந்தாட்டச் சங்கங்கள், மற்றும் ஏனைய விளையாட்டுச் சங்கங்களினதும் நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது. (த)

### அமைச்சரவையின் பின் நடக்கும்

# வாராந்த செய்தியாளர் மாநாடு நிறுத்தம்!

கொழும்பு, ஆக. 25

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த செய்தியாளர் மாநாடு உடனடியாக நிறுத்தப்பட்டு விட்டது.

இதற்கிணங்க, கடந்த 19 ஆம் திகதி நடத்தப்பட விருந்த செய்தியாளர் மாநாடு நடத்தப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இச்செய்தியாளர் மாநாடு நடத்தப்படும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ராஜாங்க அமைச்சராக இருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்தார்.

பிரேமதாசா நிர்வாகத்திலும் இந்த முறை தொடர்ந்தது. மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா அமைச்சரவைப் பேச்சாளராக இருந்தார். பின்னர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பேச்சாளராகத் தொடர்ந்தார். அவர் பிரதமரானதைத் தொடர்ந்து அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் அமைச்சரவைப் பேச்சாளராகப் பணிபுரிந்தார்.

இதற்கிடையில் —

அமைச்சரவை முடிவுகளை அறிக்கையாகத் தயாரித்து வெளியிடுவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேவைப்படுமிடத்து அமைச்சர்கள் சொந்த ரீதியில் செய்தியாளர் மாநாடுகளை நடத்துவார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அவசியம் ஏற்படுமிடத்து தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ செய்தியாளர் மாநாடுகளை நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

# மனத்தூய்மை தரும் மதநெறியை மாணவர் அறிய வேண்டும்

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரை

யாழ்ப்பாணம், ஆக. 25

"கல்லூரிப் படிப்புடன் மாணவர்கள் நின்றுவிடக் கூடாது; மனதைத் தூய்மைப் படுத்தும் சமய நெறிகளை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அன்பும் நீதியும் நிறைந்த உயர்ந்த பிரஜைகளாக முடியும்."

யாழ்ப்பாணம் மாநரசபை இந்து சமய விவகாரக்குழு நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி நடத்திய சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசும்போது இவ்வாறு கூறினார்.

சமய விவகாரக் குழுவின் தலைவர் டாக்டர் தெய்வேந்திரன் தலைமையில் கடந்த 19ஆம் திகதி மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற மேற்படி பரிசளிப்பு விழாவில் தொடர்ந்து பேசிய அவர்; யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு அதற்கு வழிகாட்டியாகி அருந்தொண்டாற்றி வருகின்றது. சைவ[illegible] யாழ். மாநகரசபை எடுத்துக் [illegible] வதுபோல் ஒவ்வொரு கிராமப் புறங்களிலும் இது போன்ற செயல்கள் இடம் பெற வேண்டும் என்று கூறினார்.

மேற்பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் செல்வன் லங்காபதி ஸ்ரீதரன் பேசும் போது;

மக்கள் ஒருமித்து எமது மதத்தை வளர்ப்பதினூடாக கலைகளும் பண்பாடும் வளர்ச்சியுறும் என்று கூறினார்.

சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றவர்களுக்கான தங்கப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் யாழ் மாநரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், குழுவின் தலைவரும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் இ. தெய்வேந்திரன் ஆகியோரும் இதர வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் [illegible] பொறியியலாளர் திரு. என். [illegible] காளர் திரு. க. தர்மலிங்கம் ஆகியோரும் வழங்கினார்கள்.

பண்ணிசைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும் கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களது ஆக்கங்களும் பேச்சுக்களும் இடம்பெற்றன. சமய விவகாரக் குழுவின் செயலாளர் திரு. இ. இரத்தினசிங்கம் நன்றியுரை ஆற்றினார். (க-111)

## செய்திக் கொத்து

### குளம் ஆழமாக்கல்

அளவெட்டி, ஆக. 25

அளவெட்டி தெற்கு வயல்வெளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள சிறுகுளத்தை ஆழமாக்கும் பணியில் சர்வோதயத்தின் உதவியுடன் ஊர்மக்கள் ஈடுபட்டுள்ளனர். (க-13)

### பஸ் சேவை நீடிப்பு

வடமராட்சி, ஆக. 25

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணத்துக்கான மினிபஸ் சேவை மேலும் நீடிக்கப் பட்டுள்ளது.

இப் பாதையால் கடைசி மினிபஸ் தினமும் பிற்பகல் 3 30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-173)

### திருமுறை ஓதல் பூர்த்தி விழா

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்றுவந்த பன்னிரண்டு திருமுறை ஓதுதல் நிகழ்ச்சியின் பூர்த்திவிழா துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவின்போது நடராசப் பெருமானின் வீதி உலா, அடியார்களுக்கு தேவாலய உபசாரம், மகேசுவர பூசை முதலியன சிறப்பாக நடைபெற்றன. (க)

### ஆன்ம விரிவுரை ஆண்டு நினைவு

வட்டுக்கோட்டை அராலி தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் ஓராண்டு காலமாக ஆன்ம விரிவுரை நிகழ்த்தி வந்த முன்னாள் பொறியியலாளர் சைவமணி சி. இரட்ணராசாவைப் பாராட்டும் விழா ஒன்று அண்மையில் ஆலய பரிபாலன சபை நிர்வாகஸ்தர் திரு ந. தம்பிராசாவின் தலைமையில் நடைபெற்றது.

இளைப்பாறிய அதிபர் திரு.க. கயிலாயநாதன் விழாவில் சிறப்புரையாற்றினார்.

### குருவிச்சை

வடமராட்சி, ஆக. 25

தமிழ் ஈழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வடமராட்சிக் கோட்டப் பிரிவு, பயன் தரும் மரங்களில் ஏற்பட்டுள்ள குருவிச்சையை அழிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. (க-173)

# மதிய உணவுத் திட்டம்; புனர்வாழ்வு அமைச்சிடம்

கொழும்பு, ஆக. 25

பாடசாலை மாணவருக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

தற்போது இத்திட்டம் கல்விச் சேவைகள் அமைச்சினால் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

பாடசாலை அபிவிருத்தி வேலைகளுடன் இத்திட்டத்தையும் அமுல் நடத்துவது கல்விச் சேவைகள் அமைச்சுக்கு ஒரு சுமையாக இருப்பதால், இந்த மாற்றம் செய்யப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது.

தற்போதைய மதிய உணவுத்திட்டம் மாணவருக்கு தரமான ஊட்டச்சத்துள்ள உணவு கிடைப்பதை உறுதி செய்யத் தவறிவிட்டது என்றும்— இதனால் இத்திட்டம் மீள் பரிசீலனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறிய மாணவருக்கு மட்டும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதா என்பதையும் அரசு பரிசீலித்து வருகிறது. (ஓ-எ)

தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காதேவி உற்சவ காலச் சிறப்பம்சம்

அடைக்கலம் நீயே

அன்னையே துர்க்காதேவி
அடைக்கலம் நீயே என்றே
எண்ணியே கண்ணீர் சிந்தி
இருகரம் கூப்புவோர்கள்
அன்னையின் கருணையாலே
அவலங்கள் நீங்கக் காண்பர்
நன்மையே காணுவார்கள்
ஞானத்திற் சிறந்தோர் ஆவர்.

— ம. பார்வதிநாதசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்த மருத்துவ மாணவர்கள்

# பேச்சு நடத்துவதற்காக கொழும்பு பயணமாகினர்

யாழ்ப்பாணம், ஆக. 25
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைத் தனிப்பீடமாக்க வேண்டும் என்ற தமது கோரிக்கை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சித்தமருத்துவ மாணவர் மன்றப் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் முதலில் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வந்தனர். அது குறித்து உரிய கவனம் செலுத்தப்படாமையால் அவர்கள் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

சித்த மருத்துவத்துறையைத் தனிப்பீடமாக்க வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்கனவே சிபாரிசு செய்துள்ளதால், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்துமாறு பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் மாணவர்களை கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அவர்கள் குமண கப்பல் மூலம் கொழும்புக்குப் பயணமாகியதாக மாணவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் கொண்ட குழுவை அனுப்பி வைக்குமாறு தாம் தெரிவித்த ஆலோசனை கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றும் மாணவர் சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இறுதித் தீர்வு கிடைக்கும் வரை மாணவர் போராட்டம் ஓயாது என்றும், மாணவர் பிரதிநிதிகள் கொழும்பில் நடத்தும் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்படும் பட்சத்தில், பல்கலைக்கழக நிர்வாகிகள் குழு ஒன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும் மாணவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

# தீவக மக்களுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள்

யாழ்ப்பாணம், ஆக. 25
தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் நலனை முன்னிட்டு உலர் உணவு முத்திரைகளுக்குப் புறம்பாக வழங்கப்படும் பங்கீட்டுப் பொருள்களின் விநியோகம் ஒரு சிரமைக்கப்பட உள்ளது. அதன் பொருட்டு கிராம அலுவலர்கள் மூலம் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

வேலணை— ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரின் பணிப்பின் பேரில் கிராம அலுவலர்களால் வழங்கப்படும் உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகளை சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களிடம் தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டு இதுவரை பதிவு செய்யப்பட்ட உலர் உணவு அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக வேலணை—ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (த-100)

# கல்விக்கு ரூ.150 கோடி கடன் ஆசிய அபி. வங்கி வழங்கும்

கொழும்பு, ஆக. 25
இலங்கையில் மேல்நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கி 150 கோடி ரூபாவைக் கடனாக வழங்கவும், தொழில்நுட்ப உதவியாக 2 கோடி ரூபாவை வழங்கவும் ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையில் தகுதி மற்றும் பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வரத்தடையாக உள்ளது என்றும் ஆசிய வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது. (உ-த-6)


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பொதுச் சபைக் கூட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 27-08-93 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொது நிர்வாக சபைக்கூட்டம் 9மணிக்கு நடைபெறும்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.

(சி 5698



## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் தம்பி

[சருகம்பானை]

இருபாலையைப் பிறப்பிடமாகவும் சருகம்பானையை வதிவிடமாகவும் தற்போது இடப்பெயர்ந்து கோப்பாய் மத்தியில் வசித்தவருமான இரத்தினசிங்கம் தம்பி என்பவர் 24-08-93 செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் எய்தினார். இவர் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், நிர்மலாதேவி, சண்முகரத்தினம், சந்திரபாலன், [ஜேர்மனி], திருநாவுக்கரசு ஜேர்மனி, ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன் பவனராணி, விஷயலக்சுமி [ஜேர்மனி] ஆகியோரின் மாமனாரும், செந்தூரன், செந்தீபன், சிவாஜினி, லக்ஷிகா, லக்ஷன், சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

இவரின் இறுதிச் சடங்குகள் 24-08-93இல் இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
செ. சிவகுமாரன்.
[மருமகன்]

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
[27058]


## குமணவில் 108 பேர் பயணம்

"குமண" கப்பல் நேற்று மாலை 108 பயணிகளுடன் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றது.

இக்கப்பல் இன்று மாலை கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களை திருகோணமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு நாளை பருத்தித்துறை வந்து சேரும்.

கொழும்பில் சிகிச்சை பெறவுள்ள நோயாளர்களை இங்கிருந்து ஏற்றிக்கொண்டு மீண்டும் நாளை இக்கப்பல் திருகோணமலை நோக்கிச் செல்லும். (அ-173)

### இடைக்கால...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இடைக்கால சபையை நிறுவுவதற்கு ஐ. தே. கட்சி விரும்பிய போதிலும் இயலுமாயின் வடக்கு — கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்டு சனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையே அது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. — என்றும் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போது சபாநாயகர் தெரிவித்தார். (அ-6)

### குருமார்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இவர்கள் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதியை கூட்டுப்படை தலைமையகம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். வரவிருக்கும் பௌத்த குருமார்களில் அஸாஜி தேரரும் ஒருவர் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில்—

அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் பொது நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றுவதற்காக வடக்கே செல்ல அனுமதி கோரி கூட்டுப்படைத் தலைமையகத்திடம் விண்ணப்பித்துள்ளார்.

அனேகமாக அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெற விருக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவது அவரது நோக்கமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ-3)

### பிரபாவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வளித்துப் பேசுகையில் இணை அமைச்சர் முன்கண்டவாறு கூறினார்.

இந்தியாவுடன் நாடு கடத்தல் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும்படி ஜேர்மன் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளை இந்தியா கோரவுள்ளதாகவும் இணை அமைச்சர் கூறினார்.

இந்திய நாடுகடத்தல் திருத்தச் சட்டத்தை பங்களாதேஷிம், பாகிஸ்தானும் இன்னும் ஏற்றுக் கொளளவில்லை என்றும் அவர் சொன்னார். (உ-எ)

### மண்கிண்டி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
செயற வண்ணம் இருந்ததைக் காணமுடிந்தது

இம் மாதிரி முகாம் மக்களின் பார்வைக்காக மூன்று நாட்கள் திறந்திருக்கும்.

இதேவேளை —

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாள் இன்று கொண்டாடப்படும்.

இதனை ஒட்டி வீதிகளிலும் வாகனங்களிலும் பதாகைகள் பறக்க விடப்பட்டுள்ளன. (த-162-17)

### வடக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஜெனரல் ரோஹான் தலுவத்த மற்றும் 15 அதிகாரிகளின் கவனயீனம் காரணமாகவே முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றி அழிக்கக் கூடியதாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையில் தவறு செய்தவர்களாகக் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளை இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்த இராணுவத் தலைமைப்பீடம் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது

விசாரணை நீதிமன்ற அறிக்கையில் குற்றவாளியாகக் காணப்படும் படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் [illegible] தனாதிபதி [illegible] ஏற்[illegible] அறிவித்திருப்பது தெரிந்ததே. (உ-6)

# மணலாறில் ஷெல் தாக்கு! இரு சகோதரிகள் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 25
மணலாறுப் பகுதியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து முல்லைத்தீவு மாவட்டம் செம்மலைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு ஆட்டிலறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இத்தாக்குதலின் போது சகோதரிகள் இருவர் காயமடைந்தனர்.

ஜெயராமணி சந்திரமோகன் (வயது 22), கஸ்தூரி சந்திரமோகன் (வயது 10) ஆகியோரே காயமடைந்தவர்களாவர் (உ-த)

# போட்டிப் பரீட்சை மூலம் எழுதுவினைஞர் பதவிஉயர்வு

கொழும்பு, ஆக. 25
அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் பகிரங்கப் போட்டிப் பரீட்சை மூலம் பதவி உயர்வுகள் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திணைக்கள தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான முதலாவது போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 25 ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை அனுப்பும் இறுதி தினம் இம்மாதம் 30 ஆம் திகதியாகும்.

அரச எழுதுவினைஞர் சேவையில் பத்தாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். இப்பரீட்சையில் 40 சதவீதமான புள்ளிகளைப் பெறுபவர்கள் முதலாம் தரத்துக்குப் பதவி உயர்த்தப்படுவார்கள். சுமார் 2 ஆயிரம் எழுதுவினைஞர்கள் இவ்வாறு பதவி உயர்த்தப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ)

## மாநகரசபைக்கு தேவையான

# குப்பை அகற்றும் வண்டில் இங்கேயே செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 25
யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியில் குப்பை அகற்றுவதற்கு தேவைப்படும் சிறு தள்ளுவண்டிகள் 15 ஆயிரம் ரூபா செலவில் யாழ். மாநகரசபை வேலைப் பகுதியில் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு செய்யப்பட்ட தள்ளு வண்டிகள் ஐக்கிய இராட்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் மாநகர சபைக்கு அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்ட வண்டிகளிலும் பார்க்க தரம் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாநகர சபையின் பிரதம நூலகத்திற்கு தேவையான தளபாடங்களும் மாநகரசபை வேலைப் பகுதியில் செய்யப்பட்டு வருகின்றன. (த-162)

## மாநகரசபை அமைக்கும்

# மலசலகூடம் அடுத்தமாதம் மக்களின் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஆக. 25
மின்சார நிலைய வீதியில் யாழ். மாநகரசபை அமைத்து வரும் மலசலகூடங்கள் அடுத்த மாத முற்பகுதியில் மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படும்.

கட்டட வேலைகள் முடிவுறும் தறுவாயில் இருப்பதாகவும், அதற்குத் தேவையான சலவைக் கல் உபகரணங்கள் விரைவில் கொழும்பில் இருந்து வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்மலசல கூடத்துடன் குளியல் அறை ஒன்றும், பொருள்களைப் பாதுகாப்பாக வைத்து எடுக்கப் பாதுகாப்பு பெட்டக வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பயன்படுத்துவோரிடம் இருந்து ஒரு தொகைக் கட்டணம் மாநகர சபையால் அறவிடப்படும். (த-162)

## நகரில் வெளிநாட்டு செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 25
வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த நான்கு பத்திரிகையாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

நியுயோர்க்கில் உள்ள இந்தியவெளிநாட்டுச் செய்திச் சேவை மற்றும் "ஒப்சேவர்" பத்திரிகையைச் சேர்ந்த சுஜீவ்வர, பி.சேனாதீர, ஆஸ்திரேலிய செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த மற்று மூன்று செய்தியாளர்களுமே இங்கு வந்துள்ளனர். (த 5-173)

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 25
தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அமைப்புகளில் ஒன்றாக செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (த)

## ஹேமா வழக்கு

கொழும்பு, ஆக. 25
திருமதி ஹேமாபிரேமதாஸ தனக்குச் சொந்தமான 89லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை தன்னிடம் ஒப்படைக்கும் படி கோரி அரசாங்கத்துக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

விவசாயக் காணி, கொழும்பிலுள்ள 2 வீடுகள், 5 வாகனங்கள் மற்றும் வீடு வளவு ஆகியவை சொத்துக்களில் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-6)

## வினாத்தாள் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஆக. 25
யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெற விருக்கும் தேசிய சான்றிதழ் ஆங்கில பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

[illegible]ட்சைப்பகுதி அதிகாரி ஒருவர் விமான மூலம் இந்த வினாத்தாள்களை எடுத்து வந்துள்ளார். (உ-3)

### பேரினவாத..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொடுத்த வெற்றிகரமான இந்த முகாம் தாக்குதல் சிங்கள பேரினவாதத்தின் இதயத்தை உறுஞ்சி எடுத்துவிட்டது. மாதம் ஒன்று கடந்த நிலையிலும் முகாம் தகர்ப்பு கொடுத்த அதிர்ச்சியில் இருந்து சிங்கள அரசு இன்னும் மீள முடியாது தவிக்கின்றது.

தமிழரின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதியை அபகரித்த சிங்கள அரசு அவற்றிற்கு சிங்கள பெயர்களையும் சூட்டி சிங்களவர்களைக் குடியமர்த்தி அம்மண்ணை சிங்களவர்கள் பூமியாக மாற்ற பெரும் முயற்சிகளை செய்து வருகின்றது. அத்தகைய பழந்தமிழ் கிராமங்களில் ஒன்று தான் மண்கிண்டிமலை இது கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து முந்திரிகைக்குளம் நோக்கிச் செல்லும் வீதியின் மையத்தில் அமைந்துள்ளது.

இப்பாதையோரம் பலமான தொடர் இராணுவ வேலியொன்றை அமைத்து தமிழீழத்தை இரு கூறுகளாகப் பிரிக்க சிங்களப்படைகள் முயன்றன. இந்த இராணுவ வேலி உடைக்கப்பட முடியாத அளவிற்கு பலமானதாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் மண்கிண்டிமலையில் சிங்களப்படைகள் முகாம் ஒன்றை அமைத்து வைத்திருந்தன.

இந்த முகாம்தான் புலிகளின் பாய்ச்சலுக்குள்ளாகி சிங்களப் பேரினவாதிகளின் நாசகாரத் திட்டத்திற்கு பலத்த அடி கொடுத்துள்ளது —என்றுள்ளது. (அ)

உதயன்த்திரிகை திரு. உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8 இலுள்ள அச்சகத்தில் 25-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org